வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 29.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசியலமைப்புச் சட்டம் எல்லா காலக்கட்டங்களிலும் நாட்டை வழி நடத்தும் ஒளிவிளக்காக திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- உத்தரபிரதேச மாநிலம் பிரயாக் ராஜில் வரும் ஜனவரி மாதம் 13-ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 26-ஆம் தேதி வரை மகா கும்பமேளா நடைபெற உள்ளது.
- நியுயார்க்கில் நடைபெற்ற 2024-ஆம் ஆண்டுக்கான ஃபிடே மகளிர் உலக ராபிட் சாம்பியன் பட்டத்தை இந்திய கிராண்மாஸ்டர் கொனேரு ஹம்பி 2-ஆவது முறையாக வென்றுள்ளார்.
- புதுச்சேரியை சேர்ந்த மருத்துவரிடம் ஆன்-லைன் மூலம் 27 லட்சம் ரூபாய் மோசடி செய்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 3 பேரை புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

***<u>மன் கி பாத்</u>***

மக்களை அரசியல் சட்ட மரபோடு இணைக்கும் வகையில் Constitution75.com என்ற பெயரில் இணையதளம் உருவாக்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று காலை ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பான மனதின் குரல் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் அரசியலமைப்புச் சட்டம் எல்லா காலக்கட்டங்களிலும் நாட்டை வழி நடத்தும் ஒளிவிளக்காக திகழ்வதாக பிரதமர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 13-ஆம் தேதி முதல் உத்தரபிரதேச மாநிலம் பிரயாக் ராஜில் தொடங்க உள்ள கும்பமேளாவில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து கோடிக் கணக்கானோர் ஒரே நேரத்தில் கலந்து கொள்ள உள்ளனர் என்றும் இதற்கான விரிவான ஏற்பாடுகள் நடந்தேறி வருவதாகவும் குறிப்பிட்ட பிரதமர் முதல் முறையாக செயற்கை நுண்ணறிவு மூலம் கும்பமேளாவோடு தொடர்புடைய அனைத்து விதமான தகவல்களும் 11 இந்திய மொழிகளில் கைப்பேசி வாயிலாக பெறும் வசதிகள் செய்யப்படுவதாகவும் கூறினார்.

அடுத்த ஆண்டு நம் நாட்டில் முதல் முறையாக உலக ஒலி-ஒளி கேளிக்கை உச்சி மாநாடு அதாவது வேவ்ஸ் உச்சி மாநாடு நடைபெற உள்ளது என்று திரு மோடி தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்தார். இம்மாநாட்டில் உலகின் பல பகுதிகளில் இருந்தும் ஊடகம் மற்றும் திரைத் துறையினரும், படைப்பாளிகளும் இந்தியாவிற்கு வர உள்ளதாகவும் இதற்கான ஏற்பாடுகளில் நம் தேசத்தின் இளம் படைப்பாளிகள் முழு உற்சாகத்தோடு பணியாற்றி வருவதாகவும் பிரதமர் கூறினார். நாம் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற திசையை நோக்கி முன்னேறும் வேளையில் நமது படைப்பாற்றல் பொருளாதாரமும் ஒரு புதிய ஆற்றலை கொண்டு வந்து சேர்க்கிறது என்பதையும் அவர் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார். அனைத்து துறை படைப்பாளிகளும் இம்மாநாட்டில் பங்கேற்க வருமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

மேலும் உலகின் மிக தொன்மையான மொழி தமிழ் மொழி என்றும், இதற்காக இந்தியர்கள் அனைவரும் பெருமைப் பட வேண்டும் என்று தெரிவித்த திரு மோடி உலகெங்கிலும் தமிழ் மொழியை கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் கூறினார். கலை முதல் ஆயுர்வேதம் மொழி, இசை, என அனைத்தும் நம் நாட்டில் கொட்டிக் கிடக்கிறது என்றும், இதுவே மற்ற நாடுகளை இந்தியாவிடம் ஈர்க்கிறது என்றும் பிரதமர் தனது மனதின் குரல் உரையின் போது கூறினார்.

நாட்டில் சுகாதாரத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளால் கடந்த 8 ஆண்டுகளில் மலேரியா நோயால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 80 சதவிகிதம் குறைந்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டில் 90 சதவிகித புற்று நோயாளிகள் உரிய நேரத்தில் சிகிச்சையை தொடங்குவதில் ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீடு திட்டம் இன்றியமையாத பங்கு வகிப்பதாக கூறிய அவர் இந்நோய் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே தற்போது அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

குளிர்காலத்தில் நாடெங்கிலும் விளையாட்டு மற்றும் உடல் உறுதி தொடர்பாக பல செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் மக்கள் உடல் உறுதியை தங்களது தினசரி வாடிக்கையாக்கி வருகிறார்கள் என்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் திரு மோடி குறிப்பிட்டார்.

காஷ்மீரில் பனிச் சறுக்கு முதல் குஜராத்தில் காற்றாடி விடுதல் வரை அனைத்து இடங்களிலும் விளையாட்டுகளின் உற்சாகத்தை காண முடிவதாகவும் சண்டே-ஆன்-சைக்கிள் மற்றும் சைக்கிளிங் டியூஸ்டே போன்ற இயக்கங்கள் மக்களுக்கு ஊக்கமளித்து வருவதாகவும் பிரதமர் கூறினார்.

அண்மையில் சட்டீஸ்கர் மாநிலத்தில் நடைபெற்ற பஸ்தார் ஒலிம்பிக் போட்டிகளில் தடகளம், வில்வித்தை, கால்பந்து, ஹாக்கி, பளுதூக்குதல், பூபந்து, கபடி, உள்ளிட்ட போட்டிகளில் 7 மாவட்டங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 65 ஆயிரம் வீரர்கள் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்தி உள்ளனர்என்றும், நாட்டின் தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தேசிய அளவில் முன்னேற்றம் அடைவதற்கான வாய்ப்பை பஸ்தர் ஒலிம்பிக் வழங்கி உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். நாட்டு மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்த பிரதமர் திரு நரேந்திர மோடி, புதிய ஆண்டில் இந்தியா பல

துறைகளில் புதிய உச்சங்களை எட்டும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். பிரதமர் ஆற்றிய மனதின் குரல் உரையின் தமிழாக்கம் புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் அனைத்து ஆகாஷ்வாணி நிலையங்களிலும் இன்று இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்பட உள்ளது.

*ராஜ்நாத் சிங்*

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள 3 ராணுவ பயிற்சி நிலையங்களை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பார்வையிடுகிறார். இந்த பயணத்தின் போது ராணுவ வீரர்களிடையே கலந்துரையாட உள்ளதை தாம் ஆவலோடு எதிர்நோக்கி உள்ளதாக அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*சூரிய கிரண்*

18-ஆவது சூரிய கிரண் என்ற கூட்டு ராணுவப் பயிற்சியில் கலந்து கொள்ள 334 வீரர்களைக் கொண்ட இந்திய ராணுவக் குழு நேபாளம் சென்றுள்ளது. மலைப் பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், மனிதாபிமான உணர்வில் பேரழிவு நிவாரணம், மருத்துவ பயிற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவது உள்ளிட்டவற்றை இருநாட்டு வீரர்களும் இணைந்து செயல்படுவதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இந்த பயிற்சியின் போது, இந்தியா நேபாள வீரர்கள் தங்களது கருத்துக்கள் அனுபவங்களை பரிமாறிக் கொள்ளவதன் மூலம் இருநாடுகளுக்கு இடையேயான நட்பு, நம்பிக்கை, கலாச்சார இணைப்பு போன்ற உறவுகளை பலப்படுத்திக் கொள்ள முடியும்.

*விமான விபத்து*

தென்கொரியாவின் முவான் சர்வதேச விமான நிலையத்தில் இன்று காலை ஜேஜு ஏர் போயிங்-737-800 விமானம் தரையிறங்கும் போது ஓடு பாதையில் இருந்து விலகி வேலியில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த

விமானத்தில் 6 விமான ஊழியர்கள் உட்பட 181 பேர் பயணம் செய்தனர். 6 விமான ஊழியர்களில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில் 177 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், 2 பேரை காணவில்லை என்றும், மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்கான சரியான காரணம் இன்னும் அறியப்படவில்லை. ஆனால் பறவைகளின் குறுக்கீடு காரணமாக இவ்விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>கும்பமேளா</u>

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக் ராஜில் வரும் ஜனவரி மாதம் 13-ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 26-ஆம் தேதி வரை மகா கும்பமேளா நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் டெல்லியில் இன்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை சந்தித்து கும்பமேளாவில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார். முன்னதாக, அவர் நேற்று தலைநகரில் முன்னாள் குடியரசு தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், பாஜக தேசிய தலைவர் திரு ஜே பி நட்டா, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மிசோரம் ஆளுநர் திரு வி கே சிங், உள்ளிட்டோரை சந்தித்து அதிகாரப் பூர்வ அழைப்பு மற்றும் அடையாளப் பரிசுகளையும் வழங்கினார். மகா கும்பமேளா தொடங்க இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில் இந்த பிரம்மாண்டமான விழாவிற்கு சிறப்பு பிரமுகர்கள் மற்றும் பொது மக்களை அழைப்பதற்கான முயற்சிகளை உத்தரபிரதேச அரசு தீவிரப்படுத்தி உள்ளது.

<u>இஸ்ரோ</u>

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இருவேறு செயற்கோள்களை இணைக்கும் வகையிலான Space Docking சோதனையை நாளை மேற்கொள்கிறது. இதுபற்றிய செய்திக் குறிப்பு..................

**ஆன்-லைன் மோசடி**

புதுச்சேரியை சேர்ந்த மருத்துவரிடம் 27 லட்ச ரூபாய் மோசடி செய்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 3 பேரை புதுச்சேரி சைபர் கிரைம் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி தங்களை போலீஸ் அதிகாரி, தகவல் தொடர்புத் துறை அலுவக அதிகாரி உள்ளிட்ட பல்வேறு பொய்களைக் கூறி அப்பாவி பொது மக்களை மிரட்டி கோடி கணக்கில் பணம் பறித்த மோசடி கும்பலைச் சேர்ந்த 3 பேரை புதுச்சேரி சைபர் கிரைம் ஆய்வாளர்கள் தலைமையிலான தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர். தலைமறைவாகி உள்ள 3 பேரை தேடி வருகின்றனர்.

**செஸ்**

நியுயார்க்கில் நடைபெற்ற 2024-ஆம் ஆண்டுக்கான ஃபிடே மகளிர் உலக ராபிட் செஸ் சாம்பியன் பட்டத்தை இந்திய கிராண்மாஸ்டர் கொனேரு ஹம்பி வென்றுள்ளார். இதன் மூலம் இந்தப் பட்டத்தை 2-ஆவது முறையாக பெறும் இந்தியர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார். முன்னதாக 2019-ஆம் ஆண்டு ஜார்ஜியாவில் நடைபெற்ற போட்டியில் முதல் முறையாக ராபிட் செஸ் சாம்பியன் பட்டத்தை இவர் வென்றார். இவருக்கு பிரதமரர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த சாதனையை அடைந்த ஹம்பியின் மன உறுதியும், அறிவுக்கூர்மையும், லட்சகணக்கானோருக்கு தொடர்ந்து ஊக்கமளிப்பதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் பாராட்டி உள்ளார்.

**ஹாக்கி**

ஹாக்கி-இண்டியா லீக் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சூர்மா அணியை தமிழக அணி எதிர்கொள்கிறது. இப்போட்டி இனி 8.15-க்கு தொடங்குகிறது. மற்றொரு ஆட்டத்தில் ஐதராபாத்-பெங்கால் அணி மோதுகின்றன.

## ஏனாம்

மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் திருவுருவப் படத்திற்கு புதுடெல்லிக்கான புதுச்சேரி அரசின் சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணராவ் தலைமையில் ஏனாம் எர்ரா கார்டனில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## கிரிக்கெட்

இந்திய-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே மெல்போர்னில் நடைபெற்று வரும் பார்டர் கவாஸ்கர் கோப்பைக்கான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரின் 4-ஆவது ஆட்டத்தின் நான்காம் நாளான இன்று ஆஸ்திரேலியா அணி 333 ரன்கள் முன்னிலையில் உள்ளது. இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பூம்ரா டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 200 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். மேலும் குறைந்த ஆவரேஜில் 200 விக்கெட் எடுத்த வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையையும் இவர் படைத்துள்ளார்.

முன்னதாக இந்தியாவும்-ஆஸ்திரேலியாவும் தலா 1 போட்டியில் வெற்றி பெற்றும், 3-ஆவது போட்டி டிராவில் முடிவடைந்ததும் குறிப்பிடத் தக்கது.

## ஏகாதசி

108 திவ்விய தேசங்களில் முதலாவதான ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வைகுண்ட ஏகாதசி திருவிழா நாளை தொடங்கி 21 நாட்கள் நடைபெற உள்ளது. வரும் ஜனவரி 10-ஆம் தேதி வைகுண்ட ஏகாதசி தினத்தன்று அதிகாலை 4.15 மணிக்கு விழாவின் முக்கிய நிகழ்வான சொர்கவாசல் திறப்பு நடைபெறும்.

**<u>நீதிபதி</u>**

**இமாச்சல பிரதேச உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக திரு குர்மீத் சிங் சந்தாவாலியா இன்று பதவி ஏற்றுக் கொண்டார். சிம்லா ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் ஆளுநர் திரு சிவ் பிரதாப் சுக்லா அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு சுக்வீந்தர் சிங் சுகு மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.**